**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, MADURAI.**

**O.S. No. 270/2022 and 267/2023 and 268/2023**

**P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : P. ஒய்யம்மாள் | **Father Name** : | |
| **Village** | : | **Taluk** | : |
| **Calling** | : | **Age** | : |

Solemnly affirmed by of this Court on **12.08.2026** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

**வாதி தரப்பில் முதல் விசாரணை:**

நான் OS.No.270/2022 வழக்கில் வாதி ஆவேன். வழக்கு விவரம் தெரியும். எனது தரப்பு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா, அ.வல்லாளபட்டி, கிராம பட்டாக்கள் 12 எண்ணிக்கை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு என்னால் சான்றொப்பம் செய்யப்பட்டது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.04.2015ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி பதிவு செய்த பாகப்பிரிவினை ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 முதல் 7 பிரதிவாதிகளின் தந்தை அய்யணன் என்பவரின் இறப்பு சான்றிதழ் கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு என்னால் சான்றொப்பம் செய்யப்பட்டது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி பதிவுத்துறைக்கு அனுப்பிய மனுக்கள் நகல்கள் எண்ணிக்கை 3 அஞ்சல் ரசீதுடன் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மதுரை மாவட்டம் மேலவளவு காவல்நிலையத்தில் 1ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதி மீது கொடுத்த புகார் மனுவின் முதல் தகவல் அறிக்கை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு, சான்றொப்பம் செய்யப்பட்டது **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சென்னை, பத்திர பதிவுத்துறை தலைவர்

அவர்கள் எங்களுக்கு அனுப்பிய அலுவலக கடித எண்.32498/U4/2021 கடிதம் அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மதுரை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.10.2021ம் தேதி மாவட்ட ஆட்சி தலைவர் வாதிக்கு அனுப்பிய கடிதம் அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.10.2021ம் தேதி மதுரை மாவட்ட ஆட்சி தலைவர் வாதிக்கு அனுப்பிய கடிதம் அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.11.2021ம் தேதி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் வாதிக்கு அனுப்பிய கடிதம் அசல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.11.2021ம் தேதி மதுரை மண்டல துணை பதிவுத்துறை தலைவர் வாதிக்கு அனுப்பிய கடிதம் அசல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.11.2021ம் தேதி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் வாதிக்கு அனுப்பிய குறிப்பாணை கடிதம் அசல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.12.2021ம் தேதி மேலூர் சார்பதிவாளர் அவர்களுக்கு வாதி அனுப்பிய ஆட்சேபனை மனு நகல் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.05.2022ம் தேதி வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் அஞ்சலக ரசீதுடன் **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.05.2022ம் தேதி வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை எண்ணிக்கை 6 **வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.05.2022ம் தேதி வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை 3 ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட கவர் அசல் **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகளின் கொடிவழி ஜாபிதா நகல் **வா.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.05.1976ம் தேதியன்று வாதியின் பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.09.1986ம் தேதியன்று 6ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.02.1999ம் தேதியன்று 4ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.07.2002ம் தேதியன்று 1ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11.12.2013ம் தேதியன்று 1ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல்

**வா.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.05.2014ம் தேதியன்று 1ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.08.2014ம் தேதியன்று 1ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.11.2016ம் தேதியன்று 7ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.09.2022ம் தேதியன்று வாதி தாக்கல் செய்த மனுவில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை WP (MD) No.22698/2022 வழக்கின் உத்தரவு கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்டது **வா.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.01.2023ம் தேதியன்று மாவட்ட பதிவாளர் வழங்கிய உத்தரவின் அசல் அஞ்சல் உறையுடன் **வா.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் கோரியதின் பேரில் குறுக்கு விசாரணைக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/- ஒய்யம்மாள்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.12 05:05:29 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.